**நவம்பர் – 21**

**"என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்." - யாக் 1: 2, 3.**

சோதனைகள் எல்லாம் முடிந்து விட்டன என்றும், ஜெயங்கொண்டவர்களில் ஒரு இடத்தை பெற அங்கீகரிக்கப்பட்டுவிட்டோம் என்றும் இருக்க, சந்தேகமில்லாமல் அடிக்கடி நாம் எல்லாரும் விரும்புவதுண்டு. ஆனால் பொறுமையும், விசுவாசமும், நம்பிக்கையும் நம்மை கர்த்தருக்கு மேன்மையானவர்களும், இஷ்டமுள்ளவர்களாகவும், கீழ்ப்படிகிறவர்களுமாக்கி நம்முடைய இருதயங்களில் ஒரு களிம்பகற்றும் வேலையை செய்ய வேண்டியவைகளாயிருக்கின்றன. இந்த நல்ல வேலை தொடர்ந்து நடந்தேறுவதாக, நமக்கு லாபகரமாயிருக்கிற, நம்மை குணத்தில் பலமுள்ளவர்களாக்கவும், சத்தியத்திற்காகவும், நீதிக்காகவும், அதிக உறுதியுள்ளவர்களாக்கவும், நம்முடைய பலவீனங்களைக் குறித்து அதிகமாக அறிய செய்யவும், அவைகளுக்கு எதிராக அதிக விழிப்புள்ளவர்களாக்கவும், சாத்தியமாக்குகின்ற எந்தவிதமான படிப்பினைகளையும் நம்முடைய சோதனைகள் நமக்குக் கொடுக்குமானால், சந்தோஷப்படுவோமாக. பூர்த்தியாகாத வெற்றிகளை மாத்திரம் தந்த போர்களும் கூட நமக்குக் கூடுமானவரை அனுகூலமாகவே இருக்கின்றன. பூரண தோல்வியை பெற்றிருக்கிற முக்கிய விஷயங்களில் கூட அதின் பலன், குணம் பலப்படுதலும், திரும்பவும் அத்திசையில் முன்பு இருந்ததைவிட அதிக பக்தி வைராக்கியம் கொண்டவர்களாயிருப்பதற்காக தீர்மானத்தின் ஒரு தெளிவும், ஜெபத்தில் கர்த்தருக்கு முன்பாக ஒரு இருதயத் தாழ்மையும் ஆகிய இவைகளாக இருக்கலாம். **-Z '02, 133 (R 3000).**

நஷ்டங்கள், ஏமாற்றங்கள், தாமதங்கள், தடைகள், தள்ளிப்போகுதல் தவறுகள், குறைகள், பலவீனங்கள், பிழைகள், தோல்விகள், சிட்சைகள், கஷ்டம், தேவைகள், ஆபத்துக்கள், மனவேற்றுமைகள், ஒற்றுமையின்மை, பிரிவினைகள், திரித்துக் கூறுதல், எதிர்ப்புகள், வியாதி, வருத்தங்கள், மனவேதனைகள், அபாயங்கள், உபத்திரவங்கள், ஆகிய இவைகளில் ஏற்படுகின்ற சோதனைகளே இங்கே குறிக்கப்பட்டிருக்கிற கிறிஸ்தவனின் சோதனைகள். இப்படிப்பட்ட சோதனைகளின் இயல்பான போக்கு நமக்கு மனத்துயரத்தை உண்டாக்குவதே. ஆனால், இவைகள் தேவனுடைய தயவின் சான்றுகள் என்றும், நம்முடைய அபிவிருத்திக்காகவுள்ள சந்தர்ப்பங்கள் என்றும் கருதி இவைகளில் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். ஆரம்பத்தில் இப்படிப்பட்ட சோதனைகளுக்கு மத்தியில் சந்தோஷப்படுவது கூடாத காரியமாக இருக்கிறது. நாம் செய்யக் கூடிய மிகச் சிறந்தது அவைகளை மிகுந்த சந்தோஷமாக எண்ண வேண்டும். அதாவது உண்மையான சந்தோஷம் அல்ல. அப்படி எண்ணப்பட வேண்டும் நாள் செல்லச் செல்ல இப்படி எண்ணுதல் ஒரு பழக்கமாகி விடும். இந்தப் பழக்கம் படிப்படியாக, அதிக சந்தோஷப்படவும், மகிமைப்பாராட்டவும், நம்மை சாத்தியமாக்குகிற அப்படிப்பட்ட சந்தோஷத்தை நம்முடைய உபத்திரவங்களில் அல்லாவிட்டாலும், அவைகளின் மத்தியில் உண்டுபண்ணும். அல்லேலுயா! **-P '35, 171.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யாத் 34:12; உபா 13:3; சங் 119:165; நீதி 2:10-12; 14:27; ஏசா 33:15,16; மத் 4:1-11; 13:22; ரோம 5:3-5; 8:35-39; 12:21; 1கொரி 10:13,14; 2கொரி 7:4; எபே 6:11-17; எபி 2:18; 4:15.**

**கோபுர வாசிப்பு : Z '14, 149 (R 5459).**

**வினாக்கள் : இவ்வார பரீட்சைகள் என்னவாயின? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? உதவியாக இருந்தது எது? இடையூறாக இருந்தது எது? அவற்றின் பலன்கள் எவை?**